**மோட்டார் விபத்து கோருரிமை தீர்ப்பாயம், (சார்பு நீதிமன்றம்) செஞ்சி**

**எம். சி.ஓ.பி.எண். 84/2014** **நாள். 16.03.2023**

2023 ம் ஆண்டு மார்ச் திங்கள் 16 நாள் மனுதாரர் தரப்பு 3 ம் சாட்சியின் வாக்குமூலம் 1969 ம் ஆண்டு உறுதிமொழி சட்டப்படி சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சுந்தர் | தொழில் | |
| த. பெ./க.பெ. | சுகுமார் | சாதி | |
| கிராமம் | சென்னை (திருநீர்மலை) | மதம் | இந்து |
| வட்டம் | | வயது | 31 |

**ம..சா.3**

**முதல் விசாரணை**

நான் திருநீர்மலையில் வசித்து வருகிறேன். நீதிமன்ற அழைப்பாணை பேரில்சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். நான் சுமார் 10 வருடத்திற்கு முன்பு வண்டலூரில் உள்ள திருமலா பால் கம்பெனிக்கு டாடா ஏசி வாகனத்தின் ஓட்டுநராக பணிபுரிந்தேன். என்னுடன் நிறுவனத்தின் சேல்ஸ்மேனேஜராக பணிபுரிந்த சின்ன துரை என்பவர் எனது வாகனத்தில் வருவார். 06.12.2013 ம் தேதி விடியற்காலை 4.30 மணிக்கு ஜமாயி ஐஸ்கீர்ம் கடைக்கு அருகே விபத்து நடந்தது. TN 25 AA 9190 என்ற லாரி நான் ஓட்டி சென்ற டாடா ஏசி வாகனத்திற்கு முன்னால் சென்று கொண்டிருந்தது. அப்போது பனிக்காலமாக இருந்தது. முன்னால் சென்ற லாரி ஓட்டுநர் திடீரென்று பிரேக் பிடித்ததால் பின்னால் சென்ற நான் லாரி மீது மோதிவிட்டேன். விபத்தில் என்னுடன் டாடா ஏசி வாகனத்தில் வந்த சேல்ஸ் மேனேஜர் சின்னதுரை என்பவர் இறந்துவிட்டார். எனக்கு விபத்தில் முகத்திலும், இடது கையிலும் காயங்கள் ஏற்பட்டது. பின்னர் ஆம்புலன்ஸ் மூலம் மருத்துவமனைக்கு சென்றோம் . எனக்கு முன்னால் சென்ற லாரியின் ஓட்டுநர் திடீரென்று பிரேக் பிடித்ததால் தான் விபத்து நடந்தது. விபத்தில் எனக்கு ஏற்பட்ட காயங்களுக்காக நஷ்டயீடு கோரி சென்னையில் உள்ள நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். அந்த வழக்கு எண் தெரியாது. அந்த வழக்கில் எனக்கு ரூ. 95 ஆயிரம் நஷ்டயீடு வழங்கினார்கள்.

**2 ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

எனக்கு ரூ. 95 ஆயிரம் நஷ்டயீடு டாடா ஏசி வாகனத்தின் காப்பீட்டு நிறுவனம் வழங்கியது. சம்பவம் நடந்த இடத்தில் வேகத்தடை எதுவும் இல்லை. அந்த இடத்தில் சாலை எதுவும் பிரிந்து செல்லவில்லை. நான் ஓட்டி சென்ற டாடா ஏசி வாகனத்தின் பதிவு எண். TN 22 CJ 4336 ஆகும். ஸ்ரீபெரும்பத்தூரில் இரவு 1 மணிக்கு வண்டியை எடுத்து வண்டலூருக்கு வந்தோம். வழியே வாடிக்கையாளருக்கு பால் இறக்கி விட்டு வந்தோம். எனக்கு முன்னால் சென்ற லாரிக்கு பின்னால் 10 அடி தூரத்தில் நான் டாடா ஏசி வாகனத்தை ஓட்டி சென்றேன். அப்போது பனிக்காலம் என்பதால் பார்வை குறைவாகவும், விளக்கு வெளிச்சம் குறைவாகவும் இருந்தது. நான் போதிய இடைவேளை விட்டு வாகனத்தை ஓட்டி யிருந்தால் விபத்தை தவிர்த்து இருக்கலாம் என்றாலும் விபத்திற்கு நான் தான் காரணம் என்றாலும் சரியல்ல. நான் நள்ளிரவு 1 மணிக்கு வாகனத்தை எடுத்து இரவு முழுவதும் வாகனம் ஓட்டியதால் தூக்க கலகத்தில் விபத்தை ஏற்படுத்திவிட்டேன் என்றால் சரியல்ல. டாடா ஏசி வாகனத்தில் முன் பக்கத்தின் இடதுபுறம் தான் சேதம் ஏற்பட்டது என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. விபத்திற்கு யார் காரணம் என்று போலிசார் இறுதி அறிக்கை தாக்கல் செய்தார்கள் என்று எனக்கு தெரியாது. விபத்து சம்பந்தமாக சாட்சியம் அளிக்க எனக்கு அழைப்பாணை வரவில்லை. லாரி ஓட்டுநர் மீது தவறு இல்லை என்பதால் அவர் மீது இறுதி அறிக்கை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

**4 ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் வாகனத்தை வேகமாக ஓட்டமாட்டேன். மெதுவாக தான் ஓட்டி செல்வேன். நான் லாரிக்கு பின்னால் 10 மீட்டர் தூரத்தில் சென்றேன். லாரி ஓட்டுநர் திடீரென்று பிரேக் பிடித்தால் விபத்து ஏற்பட்டது என்றாலும், விபத்திற்கு லாரி ஓட்டுநர் தான் காரணம் என்றாலும் சரிதான். லாரியின் ஓட்டுநர் மீது தான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான்.